1971 ஜூலை 12]

அயைப்பற்றி இருந்தால் அந்த உறுப்பினர்களுக்கு, நெசவாளர்களைப்பற்றி இருந்தால் அதைப்பற்றியவர்களுக்கு, வக்கீல்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு இப்படிக் கொடுக்கப்படுகிறது. எல்லோரும் துணைக் கேள்விகள் கேட்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அது வரவேற்கத் தக்கதுதான். ஆனால் சில நேரங்களிலே கேள்விகள் முடிக்க முடியாமல் போய்விடக்கூடும்.

இன்னும் இங்கே உரத் தொழிற்சாலை போன்ற முக்கியமான கேள்விகள் இருக்கின்ற காரணத்தினாலே சில கேள்விகளுக்கு மட்டும் அனுமதி கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். எல்லோரும் அழைக்கப்படவில்லையென்பதால் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று நினைக்கவேண்டாம். சில கேள்விகளுக்கு மட்டும் அனுமதி கொடுக்க நினைக்கிறேன். உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள் வட்டங்களை வட்டங்களாக்கல்

* 200 வினா.—திரு. க. சுப்பு: மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள காரைக்குடி, விருதுநகர், இராஜபாளையம் ஆகிய உள் வட்டங்களை தாலுக்காக்களாக மாற்றி, வேலை முறையைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள எல்லா உள்வட்டங்களையும் வட்டங்களாக்குவதற்கு எல்லா கோட்டாட்சி தலைவர்களிடமிருந்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் செயற்குறிப்புகள் கேட்டிருக்கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: எற்கனவே திருப்பத்தூர் தாலுகாவிலிருந்து காரைக்குடி, சாத்தூர் தாலுகாவிலிருந்து விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலிருந்து இராஜபாளையம் இவைகள் இப்போது சப்-தாலுகாக்களாக அமைக்கப்பட்டு, இந்தக் குறிப்பு வருகிறவரையில் காத்திராமல் இவைகளையெல்லாம் அப்கிரேட் செய்ய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பொதுத் தேர்தலுக்காக இவையெல்லாம் ஒத்திவைக்கப்பட்டு தேர்தல் முடிந்து விட்ட பிறகு இப்போது அவை பற்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

Review on work of Export Promotion Councils

* 201 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether any special Committee appointed by the Central Government to evaluate the working of the Export Promotion Councils visited Madras on or about the 3rd May 1971; and

(b) if so, the details thereof?